2. அறிவிப்பு.

திருத்தப் பெறும் விடைகளும் துறைக்கு அனுப்பப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு அமைச்சர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வினாக்களுக்கான விடைகள் பேரவைத் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த விடைகள் தான் வினாக்கள் பேரவையில் கேட்கப்பட்டவுடன் பத்திரிகை களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. சில சமயங்களில் பேரவையில் வினாக்கள் விடையளிக்கப்படுகையில் மாண்புமிகு அமைச்சர்கள் திருத்திய விடைகளை அளிக்கிறார்கள். அப்படி தாங்கள் ஏற்கெனவே அனுப்பிய விடைகளில் திருத்தம் இருக்குமானால் பேரவைத் துறைக்கு முன்னதாகத் தகவல் அளித்து, திருத்தப்பட்ட விடைகளையும் அனுப்பி வைப்பதுதான் முறையாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) பேரவையின் அலுவல் நேரம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நம்முடைய மாமன்றத் திலே 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சனிக்கிழமை அன்று கட்சித் தலைவர்கள் பேசி, விவாதத்திற்கு பதில் அளிக்க இருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இரண்டாவது பிரதான எதிர்க்கட்சியாக இங்கே இருக்கிறது. அப்படி இருந்தாலும் நாள் ஒன்றுக்கு கட்சிக்கு ஒருவர் பேசுவது என்ற நடைமுறை இருப்பதால் பல உறுப்பினர்களுக்குப் பேசு வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மாலை நேரத்திலும் அவைக் கூட்டத்தை நடத்தி, பல உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: தலைவரவர்களே, தூத்துக் குடியிலுள்ள அனல் மின்சார நிலையம் தீப்பிடித்ததன் காரணமாக இரண்டு, மூன்று நாட்களாக வேலை செய்யவில்லை. அதனால் . . ,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மின்சாரம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றைக்கு வருகிறது, உட்காருங்கள்,

1982 மார்ச் 4]

திரு. இரெ. இராசமாணிக்கம் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். என்னுடைய தொகுதியில் பயங்கரமான கலவரம் ஏற்பட்டு, பல்லாயிரக் கணக்கான ரூபாய் சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. பலர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்சனைகளை இப்படி திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? ஏதாவது பொதுப் பிரச்சனையாக இருந்தால் சொல்லலாம்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, நேற்றிலிருந்து இராஜ பாளையத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடக்கிறது. அங்கே மக்களுக்கு குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. சாப்பிட்டுவிட்டு, கை கழுவு வதற்கும்கூட தண்ணீர் இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி சட்டசபையில் கேட்க வேண்டியதில்லை ; அங்கே இருக்கிற நகராட்சியில் சொல்லலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, நான் 2, 3 உரிமைப் பிரச்சனைகள் கொடுத்திருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி அறையில் வந்து கேளுங்கள்.

4. உரிமைப் பிரச்சினை.

வானொலி மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 246-வது விதியின்கீழ், "வானொலி" மீது அவ்வுரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இப்பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கிறேன்.

"சென்னை வானொலி நிலையம் 1-3-1982 அன்று மாலை 7.00 மணி ஒலிபரப்பில் சட்டமன்ற நிகழ்ச்சியைப் பற்றி குறிப்பிட்டபோது எதிர்க் கட்சித் தலைவரின் கேள்வியையும் அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இருட்டடிப்புச் செய்து இருக்கிறது. கேள்வி-பதில் சம்பந்தமாக ஒரு பகுதியைச் சொல்லிவிட்டு மறுபகுதியை இருட்டடிப்பு செய்வது வேண்டு மென்றே திட்டமிட்டு உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியம் ஆகும். அது அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே, இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன்" என்று திரு. ரகுமான்கான் அவர்கள் தன் முன்னறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.